©
தமிழ்நாடு அரசு
2016

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 4.80 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 24] சென்னை, புதன்கிழமை, ஜூன் 15, 2016
ஆனி 1, துன்முகி, திருவள்ளுவர் ஆண்டு–2047

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**தொழில் துறை**

**அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண் 12, தொழில் (எம்.எம்.சி.1)த் துறை, 27 ஜனவரி 2016.]*

1957 ஆம் ஆண்டு சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்படுத்துதல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 67/1957) 15 ஆம் பிரிவைச் சார்ந்த, உட்பிரிவுகள் (1) மற்றும் (1–A) ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு சிறு கனிமச் சலுகை விதிகளில் பின்வரும் திருத்தத்தினை இதனால் செய்கிறார்.

**திருத்தம்**

மேற்சொன்ன விதிகளில், விதி 42, பகுதி (iii) இல், ‘‘இருநூற்று எழுபது நாட்கள்’’ என்ற தொடருக்குப் பதிலாக ‘‘முந்நூற்றுத் தொண்ணூறு நாட்கள்’’ என்ற தொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

**சி.வி. சங்கர்,**
*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*



DTP—24-III-1(a)(T-Sup)—1

## தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை

## அறிவிக்கைகள்

*[அரசாணை (நிலை) எண் 205, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (K2)த் துறை, 14 டிசம்பர் 2015.]*

**1966**ஆம் ஆண்டு பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை வாய்ப்பு நிலைமைகள்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் **32/1966**), **44**ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** மற்றும் **(2)** உட்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு **1968**ஆம் ஆண்டு பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை வாய்ப்பு நிலைமைகள்) விதிகளில் செய்யக் கருதியுள்ள திருத்தங்களுக்கான பின்வரும் அறிவிக்கையின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் **44**ஆம் பிரிவைச் சேர்ந்த **(3)** உட்பிரிவின் பகுதியில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

**2.** இந்த வரைவு திருத்தங்களுக்கான அறிக்கை, *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படும் நாளிலிருந்து மூன்று திங்கள் முடிவடைந்த நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென்றும், மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், யாதொரு நபரிடமிருந்து வரப்பெறும் ஏதேனும் மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்கும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின் அவற்றை, சென்னை**—600 006** இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலமாக, அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை**—600 009** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

### *வரைவுத் திருத்தங்கள்*

மேற்சொன்ன விதிகளில்,**—**

**(1)** **35**ஆம் விதியைச் சேர்ந்த (ii) துணைவிதியில் உள்ள ''ஆண்டு கணக்கு விவர அறிக்கை'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''ஒருங்கிணைந்த ஆண்டு கணக்கு விவர அறிக்கை'' என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**(2)** படிவம் எண் XII-க்குப் பதிலாக, பின்வரும் படிவம் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

அவையாவன:**—**

### படிவம் எண்.XII

**(35**ஆம் விதியைச் சேர்ந்த (ii) துணை விதியைக் காண்க**)**

**31.3.20..........**அன்றுடன் முடிவடைந்த ஆண்டுக்கான ஒருங்கிணைந்த ஆண்டு கணக்கு விவர அறிக்கை.

**1.** தொழிற்சாலை வளாகத்தின் பெயர்:

**2.** தொலைபேசி எண். நிகரி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரியுடன் தொழிற்சாலை வளாகத்தின் முழு முகவரி:

**3.** உரிம எண்:

**4.** உரிமத்தின் செல்திறன் காலஅளவு:

**5.** வேலையளிப்பவரின் பெயர், கைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி:

**6.** மேலாளர்/அதிகாரமளிக்கப்பட்ட நபரின் பெயர், முகவரி, கைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரியுடன்:

**7.** தொழிற்சாலை வளாகத்தில் அன்றாடம் பணியமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் சராசரி எண்ணிக்கை:
- (a) ஆண்கள்:
- (b) பெண்கள்:
- (c) இளையோர்:
  - (i) ஆண்:
  - (ii) பெண்:

மொத்தம்:

**8.** தொழிற்சாலை வளாகத்தில் மாதந்தோறும் பணியமர்த்தப்பட்ட வீட்டுப் பணியாளர்களின் சராசரி எண்ணிக்கை:

9. வாரந்திர விடுமுறை:

10. தொழிற்சாலை வளாகத்தில் அந்த ஆண்டில் பணிபுரிந்த நாட்களின் எண்ணிக்கை.

11. அன்றாடப் பணி நேரமும், மிகைப்பணி நேரமும்:

12. ஒரு வாரத்தில் பணிபுரிந்த வழக்கமான காலஅளவு:

13. மிகைநேரப் பணிக்கான ஊதியம் மற்றும் படிகள் உட்பட வழங்கப்பட்ட மொத்த சம்பளத் தொகை/ஊதியம்:

**14. பணியிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்ட/இடைக்கால பணிநீக்கம் செய்யப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை:**

(i) அந்த ஆண்டில் பணியிலிருந்து வெளியேற்றப்பட்ட/ பணியறவு செய்யப்பட்ட/பணி நீக்கம் செய்யப்பட்ட/பதவி விலகிய/பணி ஒய்வு பெற்ற/இறந்து போன பணியாளர்களின் எண்ணிக்கை:

(ii) வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை:

(iii) அந்த ஆண்டில் பணியிடை நீக்கம் செய்யப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை:

(iv) வழங்கப்பட்ட பிழைப்பூதியப் படித் தொகை:

**15. ஊதியங்கள்**

(i) பிடித்தம் செய்யப்பட்டு வழங்கப்பட்ட மொத்த ஊதியங்கள்:
- (a) அடிப்படை ஊதியம்:
- (b) அகவிலைப்படி:
- (c) மிகைநேரப் பணிக்கான ஊதியம்:
- (d) ஆதாயமற்ற மிகைச்சம்பள பகிர்வு:
- (e) ஏனையப் படிகள் (ரொக்கத்தில்):
- (f) அந்த ஆண்டில் வழங்கப்பட்ட முந்தைய ஆண்டுக்கான நிலுவைச் சம்பளம்:

(ii) மாதமொன்றுக்கு ரூ. **18,000/–***க்கு மிகாமல் ஊதியம் பெறும் நபர்களின் எண்ணிக்கை (*மத்திய அரசின் அறிவிக்கைக்கேற்ப மாறுதலுக்குட்பட்டது)

ஆண்கள்:

பெண்கள்:

இளையோர்:

(iii) சலுகை தொடர்பான பண மதிப்பு விவரங்கள்:

(iv) ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்ட விவரங்கள்:

| | பிடித்தம் செய்யப்பட்டவாறு | தொடர்புடைய பணியாளர்களின் எண்ணிக்கை | பிடித்தம் செய்யப்பட்ட மொத்தத் தொகை |
|---|---|---|---|
| (a) | அபராதங்கள் | | |
| (b) | சேதங்கள்/இழப்பு | | |
| (c) | ஒப்பந்த மீறல் | | |
| (d) | ஏனையவை | | |
| | மொத்தம் | | |

(v) ஊதிய கால அளவு

(vi) ரொக்கமாக செலுத்தப்பட்ட மொத்த ஊதியங்கள்

(vii) பிறவகையில் வழங்கப்பட்ட ஊதியத்தின் மொத்த ரொக்க மதிப்பு

| | | |
|---|---|---|
| (viii) அபராதத் தொகையிலிருந்து வழங்கல் | நோக்கம் | தொகை |
| (a) | | |
| (b) | | |
| (c) | | |

(viii) அந்த ஆண்டின் இறுதியில் கையிருப்பிலுள்ள எஞ்சிய அபாரதத் தொகை

(ix) தமிழ்நாடு தொழிலாளர் நல நிதி வகையில் வசூலிக்கப்பட்டு அபாரதத்தொகை செலுத்தியதற்கான விவரங்கள்

(a) பணம் செலுத்திய முறை:

(b) தொகை:

**16. விடுப்பு:—**

(i) ஈட்டிய விடுப்பு பெறுவதற்குத் தகுதியான பணியாளர்களின் எண்ணிக்கை :

(ii) தொழிற்சாலை வளாகத்தில் பணிபுரிந்து பணியாளர்களுக்கு, அந்த ஆங்கில ஆண்டில் விடுப்பு வழங்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை:

(iii) ஈட்டிய விடுப்பிற்குப் பதிலாக ஊதியம்/சம்பளம் வழங்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை:

**17. மேற்கொள்ளப்பட்ட நலத்திட்ட நடவடிக்கைகள்:**

(i) குழந்தைகள் காப்பகம்:

(ii) சலவை வசதிகள்:

(iii) தீயணைப்பான்:

(iv) முதலுதவிப் பெட்டி :

**18. பேறுகாலச் சலுகைகள்:—**

| | | |
|---|---|---|
| (i) பின்வருவனவற்றிற்கான சலுகைகள்: | தொழிற்சாலை வளாகங்களில்/ வீடுகளில் பணியமர்த்தப்பட்டு இச்சலுகைகளை பெற்ற பணியாளர்களின் எண்ணிக்கை | செலுத்தப்பட்ட மொத்த தொகை |
| (a) கருச்சிதைவு: | | |
| (b) பிள்ளைப்பேற்றுநிலை | | |
| (c) உடல்நலமின்மை | | |
| (d) மருத்துவச்சலுகை | | |
| மொத்தம் | | |

(ii) **1961**ஆம் ஆண்டு மகப்பேறுச் சலுகைச் சட்டத்தின் **6**ஆம் பிரிவின்கீழ் அறிவிப்பு அளித்த பெண்களின் எண்ணிக்கை:

(iii) பிள்ளைப்பேறு நிலையிலிருப்பதைத் தெரிவிக்கும் அறிவிப்பு பெறப்பட்டதன் பேரில் விடுப்பு அனுமதி பெற்ற பெண்களின் எண்ணிக்கை:

| | | |
|---|---|---|
| (iv) | சம்பந்தப்பட்ட பெண்ணைத் தவிர மற்ற நபர்களுக்கு தொகை வழங்கப்பட்ட நேர்வுகள்: | எண்ணிக்கை:<br>வழங்கப்பட்ட தொகை: |
| (v) | மேல்முறையீட்டு அதிகாரி அல்லது ஆய்வாளரின் ஆணையின் பேரில் தொகை வழங்கப்பட்ட நேர்வுகள்: | எண்ணிக்கை:<br>வழங்கப்பட்ட தொகை: |
| (vi) | நிராகரிக்கப்பட்ட பேறுகாலச் சலுகைக்கான கோரிக்கைகள்: | எண்ணிக்கை:<br>வழங்கப்படாதத் தொகை: |
| (vii) | நிராகரிக்கப்பட்ட மருத்துவப்படிக்கான கோரிக்கைகள்: | எண்ணிக்கை:<br>செலுத்தப்படாதத் தொகை: |
| (viii) | கருச்சிதைவிற்காக விடுப்பு •விண்ணப்பிக்கப்பட்டு, ஆனால் அவை நிராகரிக்கப்பட்ட நேர்வுகள்: | எண்ணிக்கை:<br>வழங்கப்படாத தொகை: |
| (ix) | பிரிவு 10–இன் கீழ் உடல் நலமின்மைக்கு கூடுதல் விடுப்புக்கு விண்ணப்பிக்கப்பட்டு ஆனால் நிராகரிக்கப்பட்ட நேர்வுகள்: | எண்ணிக்கை:<br>வழங்கப்படாத தொகை: |
| (x) | 1961ஆம் ஆண்டு பேறுகாலச் சலுகைச் சட்டத்தின் 12ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் வரம்பு நிபந்தனையின் கீழ் பேறுக்காலச்சலுகை, அல்லது மருத்துவப்படி மறுக்கப்பட்ட பெண்கள்: | எண்ணிக்கை:<br>வழங்கப்படாதத் தொகை: |
| (xi) | 1961ஆம் ஆண்டு பேறுகாலச் சலுகைச் சட்டத்தின் 8–ஆம் பிரிவின் கீழ் நிருவாகத்தால் பேறுகாலத்திற்கு முன்னும் பேறுகாலத்திற்கு பின்னும் கட்டணமின்றி பராமரிப்பு வசதி பெற்ற நேர்வுகளின் எண்ணிக்கை: | |

**19. மிகை ஊதியம்:–**

(i) மிகை ஊதியம் அளிக்கப்பட்டதன் வாயிலாக பயனடைந்த பணியாளர்களின் எண்ணிக்கை:

(ii) அறிவிக்கப்பட்ட மிகை ஊதியத் தொகை விழுக்காடு:

(iii) வழங்கப்பட்ட மிகை ஊதிய மொத்த தொகை:

(iv) தொகை வழங்கப்பட்ட நாள்:

**20. நிரந்தரத் தகுதி நிலை வழங்குதல்:**

(i) 480 நாட்கள் தொடர்ச்சியாக பணி நிறைவு செய்த தற்காலிகப் பணியாளர்களின் எண்ணிக்கை:

(ii) அந்த கால அளவில் பணி நிரந்தரம் செய்யப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை:

(iii) அந்த கால அளவில், அதுவரையில் பணி நிரந்தரம் செய்யப்படாத பணியாளர்களின் எண்ணிக்கை:

(iv) கால தாமதத்திற்கான காரணங்கள்:

**21. ஒப்பந்தத் தொழிலாளர்:**

(i) ஒப்பந்ததாரர்களின் பெயர் மற்றும் முகவரிகள்:

(ii) ஒப்பந்தக் கால அளவு:

(iii) பணியிலமர்த்தப்பட்ட ஒப்பந்த தொழிலாளர்களின் பணியின்/செயல்பாடுகளின் தன்மை:

(iv) ஒவ்வொரு ஒப்பந்ததாரரால் பணியமர்த்தப்பட்ட பணியாளர்களின் உயரளவு எண்ணிக்கை:

(v) பணிபுரிந்த நாட்களின் எண்ணிக்கை:

(iv) மனித உழைப்பு நாட்களின் எண்ணிக்கை:

**22. மாநிலங்களிடையே இடம்பெயர்ந்த வேலையாட்கள்:**

(i) சொந்த மாநிலத்திலுள்ள ஒப்பந்ததாரர்களின் பெயர் மற்றும் முகவரிகள்:

(ii) பணி வழங்கும் மாநிலத்தில் (தமிழ்நாடு) உள்ள முதன்மை வேலையளிப்பவரின் பெயர்:

(iii) ஒப்பந்தக் கால அளவு:

(iv) பணியிலமர்த்தப்பட்ட இடம்பெயர்ந்த பணியாளர்களின் பணியின்/செயல்பாடுகளின் தன்மை:

(v) ஒவ்வொரு ஒப்பந்ததாரரால் பணியிலமர்த்தப்பட்ட, இடம்பெயர்ந்த பணியாளர்களின் உயரளவு எண்ணிக்கை:

(vi) பணிபுரிந்த நாட்களின் எண்ணிக்கை:

(vii) மனித உழைப்பு நாட்களின் எண்ணிக்கை:

(viii) வழங்கப்பட்ட இடப்பெயர்வு படித்தொகை:

(ix) பணிபுரியும் இடத்திலிருந்து வெளியிடத்திற்குச் சென்று திரும்பியதற்கு வழங்கப்பட்ட பயணப்படித் தொகை:

(x) பணிபுரியும் இடத்திலிருந்து வெளியிடத்திற்குச் சென்று திரும்பியதற்காக வழங்கப்பட்ட சம்பளத் தொகை:

வேலையளிப்பவரின் கையொப்பம்.

நாள் :
இடம் :

**குமார் ஜெயந்த்,**
**அரசுச் செயலாளர்.**

**(தமிழாக்கம்)**

**ந. அருள்**,
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 54, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (K–2)த் துறை, 25 பிப்ரவரி 2016.]*

1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டத்தின் (மத்திய சட்டம் 69/1951) 43 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு மலைத்தோட்டத் தொழிலாளர் விதிகளில் செய்யக் கருதியுள்ள திருத்தங்களுக்கான பின்வரும் அறிவிக்கையின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 43ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் வரம்பு நிபந்தனையில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த அறிவிக்கை **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்படும் நாளிலிருந்து ஆறு வாரங்கள் முடிவடைந்த நாளன்று அல்லது அதற்குப் பின்னர் இந்த வரைவு திருத்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், யாதொரு நபரிடமிருந்து வரப்பெறும் மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்கும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அவற்றை, சென்னை–600 006–இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலமாக அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம் சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

## வரைவுத் திருத்தங்கள்

மேற்சொன்ன விதிகளில்,

(1) 83ஆம் விதியைச் சேர்ந்த (ii) துணைவிதியில் உள்ள ''படிவ எண் 16—இல் இரு படிகளில் ஆண்டு விவர கணக்கு அறிக்கை ஒன்று'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''படிவ எண் 27—இல் ஒருங்கிணைந்த ஆண்டு கணக்கு விவர அறிக்கை'' என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்படவேண்டும்.

(2) 83ஆம் விதியின் (2) துணை விதி விட்டுவிடப்பட வேண்டும்:

(3) படிவ எண் 16 முதல் படிவ எண் 21 வரையிலானவை விட்டுவிடப்பட வேண்டும்:

(4) படிவ எண் 26—க்குப் பின்னர் பின்வரும் படிவம் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும். அதாவது:—

### ''படிவ எண் 27

(83—ஆம் விதியைச் சேர்ந்த (1) துணைவிதியின் கீழ் வரையறுக்கப்பட்டது)

31.12.20——அன்றுடன் முடிவடைந்த ஆண்டுக்கான ஒருங்கிணைந்த ஆண்டு கணக்கு விவர அறிக்கை.

1. மலைத்தோட்டப் பண்ணையின் பெயர்:

2. மலைத்தோட்டப் பண்ணையின் நிகரி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரியுடன் முழு அஞ்சலக முகவரி:

3. மலைத்தோட்டப் பண்ணையின் தன்மை:

4. மலைத்தோட்டப் பண்ணையின் பரப்பளவு:

5. பதிவு எண்:

6. வேலையளிப்பவரின் பெயர், கைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி:

7. மேலாளரின் அதிகாரமளிக்கப்பட்ட நபரின் பெயர், முகவரி, கைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரியுடன்:

| | ஆண்கள் | பெண்கள் | வளரிளம் பருவத்தினர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 8. அந்த ஆண்டில் பணியமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை | | | | |
| 9. அன்றாடம் பணியமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் சராசரி எண்ணிக்கை | ஆண்கள் | பெண்கள் | வளரிளம் பருவத்தினர் | மொத்தம் |

10. வாராந்திர விடுமுறை:

11. அந்த ஆண்டில் பணிபுரிந்த நாட்களின் எண்ணிக்கை:

12. ஒரு வாரத்தில் பணிபுரிந்த வழக்கமான கால அளவு:

13. கொடுக்கப்பட்ட ஓய்வு இடைவேளை

14. படிகள் உட்பட வழங்கப்பட்ட மொத்த சம்பளத் தொகை/ஊதியங்கள்

15. பணியிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்ட/இடைக்கால பணிநீக்கம் செய்யப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை:

(i) அந்த ஆண்டில் பணியிலிருந்து வெளியேற்றப்பட்ட / பணியறவு செய்யப்பட்ட / பணி நீக்கம் செய்யப்பட்ட / பதவி விலகிய / பணி ஒய்வு பெற்ற / இறந்து போன பணியாளர்களின் எண்ணிக்கை:

(ii) வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை:

(iii) அந்த ஆண்டில் பணியிடை நீக்கம் செய்யப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை:

(iv) வழங்கப்பட்ட பிழைப்பூதியப்படித் தொகை:

**16. ஊதியங்கள்**

(i) பிடித்தம் செய்யப்பட்டு வழங்கப்பட்ட மொத்த ஊதியங்கள்:
(a) அடிப்படை ஊதியம்:
(b) அகவிலைப்படி:
(c) மிகைநேரப் பணிக்கான ஊதியம்:
(d) ஆதாயமற்ற மிகைச்சம்பள பகிர்வு:
(e) ஏனையப் படிகள் (ரொக்கமாக):
(f) அந்த ஆண்டில் வழங்கப்பட்ட முந்தைய ஆண்டுக்கான நிலுவைச் சம்பளம்:

(ii) மாதமொன்றுக்கு ரூ. 18,000/–*க்கு மிகாமல் ஊதியம் பெறும் நபர்களின் எண்ணிக்கை (*மத்திய அரசின் அறிவிக்கைக்கேற்ப மாறுதலுக்குட்பட்டது)

ஆண்கள்:

பெண்கள்:

இளையோர்:

(iii) ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்ட விவரங்கள்:

| | பிடித்தம் செய்யப்பட்டவாறாக | தொடர்புடைய தொழிலாளர்களின் எண்ணிக்கை | பிடித்தம் செய்யப்பட்ட மொத்தத் தொகை |
|---|---|---|---|
| (a) | அபராதங்கள் | | |
| (b) | சேதங்கள்/இழப்பு | | |
| (c) | ஒப்பந்த மீறல் | | |
| (d) | ஏனையவை | | |
| | மொத்தம் | | |

(iv) ஊதிய கால அளவு

(v) ரொக்கமாக வழங்கப்பட்ட மொத்த ஊதியங்கள்

(vi) பிறவகையில் வழங்கப்பட்ட ஊதியத்தின் மொத்த ரொக்க மதிப்பு

| (vii) | அபராதத் தொகையிலிருந்து வழங்கல் | நோக்கம் | தொகை |
|---|---|---|---|
| (a) | | | |
| (b) | | | |
| (c) | | | |

(viii) அந்த ஆண்டின் இறுதியில் கையிருப்பிலுள்ள எஞ்சிய அபாரதத் தொகை

(ix) தமிழ்நாடு தொழிலாளர் நல நிதி வகையில் வசூலிக்கப்பட்டு அபாரதத்தொகை செலுத்தியதற்கான விவரங்கள்

(a) பணம் செலுத்திய முறை:

(b) தொகை:

**17. விடுப்பு:—**

(i) ஈட்டிய விடுப்பு பெறுவதற்குத் தகுதியான பணியாளர்களின் எண்ணிக்கை :

(ii) ஈட்டிய விடுப்பு பெற்றுக் கொண்ட / வழங்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை :

(iii) ஈட்டிய விடுப்பிற்குப் பதிலாக ஊதியம்/சம்பளம் வழங்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை:

**18. மேற்கொள்ளப்பட்ட நலத்திட்ட நடவடிக்கைகள்:—**

(i) 1951ஆம் ஆண்டு மலைத்தோட்ட தொழிலாளர் சட்டத்தின் 11ஆம் பிரிவின்படி உணவகம் செயல்படுகிறதா

(a) சமைக்கப்பட்ட உணவு மற்றும் சிற்றுண்டி, முதலியன ஏதேனும் வழங்கப்படுகிறதா:

(b) சமைக்கப்பட்ட உணவு மட்டும் வழங்கப்படுகிறதா

(c) சிற்றுண்டி மட்டும் வழங்கப்படுகிறதா

(d) அடக்க விலைக்குள் விற்கப்படுகிறதா: அப்படியெனில், அடக்கவிலைக்குக்கீழ் விற்கப்படும் வகைகளை தெரிவிக்கவும்.

(ii) 1951 ஆம் ஆண்டு மலைத்தோட்டத் தொழிலாளர் சட்டத்தின் 12ஆம் பிரிவின்படி மழலையர் காப்பகத்திற்கு வகை செய்யப்பட்டுள்ளதா:

சேர்த்துக்கொள்ளப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை:

மழலையர் காப்பகத்தில் வழங்கப்படும் வசதிகள்:

(a) பால்

(b) உணவு

(c) உடைகள்

(d) விளையாட்டு பொம்மைகள்

(e) மருத்துவ உதவி

(f) மற்றவை

ஒவ்வொரு மழலையர் காப்பகத்தில் பணியிலமர்த்தப்பட்ட பணியாட்களின் எண்ணிக்கை:

(a) பயிற்சிபெற்ற ஆயா

(b) பெருக்குபவர்கள்

**19. நோய்க்கான சலுகைகள்:**

(i) நோய் குறித்த சலுகை பெறுவதற்கு விண்ணப்பித்த நபர்களின் எண்ணிக்கை:

(ii) நிராகரிக்கப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கையும் அதன் காரணமும்:

(iii) நோய் குறித்த சலுகை பெறுவதற்கு அனுமதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை மற்றும் செலுத்தப்பட்ட மொத்தத் தொகை :

**20. பேறுகாலச் சலுகைகள்:—**

| | சலுகைகள் பெற்ற தொழிலாலர்களின் எண்ணிக்கை | செலுத்தப்பட்ட மொத்த தொகை |
|---|---|---|
| (i) சலுகைகள்: | | |
| (a) கருச்சிதைவு: | | |
| (b) பிள்ளைப்பேற்று நிலை | | |
| (c) உடல் நலமின்மை | | |
| (d) மருத்துவச்சலுகை | | |
| (e) மொத்தம் | | |

(ii)1961 ஆம் ஆண்டு மகப்பேறுச் சலுகைச் சட்டத்தின் 6ஆம் பிரிவின்கீழ் அறிவிப்பு அளித்த பெண்களின் எண்ணிக்கை:

(iii) பிள்ளைப்பேறு நிலையிலிருப்பதைத் தெரிவிக்கும் அறிவிப்பு பெறப்பட்டதன் பேரில் விடுப்பு அனுமதி பெற்ற பெண்களின் எண்ணிக்கை:

| | | |
|---|---|---|
| (iv) | சம்பந்தப்பட்ட பெண்ணைத் தவிர மற்ற நபர்களுக்கு தொகை வழங்கப்பட்ட நேர்வுகள்: | எண்ணிக்கை:<br>வழங்கப்பட்ட தொகை: |
| (v) | மேல்முறையீட்டு அதிகாரி அல்லது ஆய்வாளரின் ஆணையின் பேரில் தொகை வழங்கப்பட்ட நேர்வுகள்: | எண்ணிக்கை:<br>வழங்கப்பட்ட தொகை: |
| (vi) | நிராகரிக்கப்பட்ட பேறுகாலச்சலுகைக்கான கோரிக்கைகள்: | எண்ணிக்கை:<br>வழங்கப்படாதத் தொகை: |
| (vii) | நிராகரிக்கப்பட்ட மருத்துவ மிகை ஊதியத்திற்கான கோரிக்கைகள்: | எண்ணிக்கை:<br>செலுத்தப்படாத தொகை: |
| (viii) | கருச்சிதைவிற்காக விடுப்பு •விண்ணபிக்கப்பட்டு, ஆனால் அவை நிராகரிக்கப்பட்ட நேர்வுகள்: | எண்ணிக்கை:<br>வழங்கப்படாத தொகை: |
| (ix) | பிரிவு 10—இன் கீழ் உடல் நலமின்மைக்கு கூடுதல் விடுப்புக்கு விண்ணப்பிக்கப்பட்டு ஆனால் நிராகரிக்கப்பட்ட நேர்வுகள்: | எண்ணிக்கை:<br>வழங்கப்படாதத் தொகை: |
| (x) | 1961ஆம் ஆண்டு பேறுகாலச் சலுகைச் சட்டத்தின் 12ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் வரம்பு நிபந்தனையின்கீழ் பேறுக்காலச்சலுகை மற்றும் அல்லது மருத்துவ மிகை ஊதியம் மறுக்கப்பட்ட பெண்கள்: | எண்ணிக்கை:<br>வழங்கப்படாத தொகை: |
| (xi) | 1961ஆம் ஆண்டு பேறுகாலச் சலுகைச் சட்டத்தின் 8—ஆம் பிரிவின்கீழ் நிருவாகத்தால் பேறுகாலத்திற்கு முன்னும் பேறுகாலத்திற்கு பின்னரும் கட்டணமின்றி பராமரிப்பு வசதி பெற்ற நேர்வுகளின் எண்ணிக்கை: | |

**21. மிகை ஊதியம்:—**

(i) மிகை ஊதியம் அளிக்கப்பட்டதன் வாயிலாக பயனடைந்த பணியாளர்களின் எண்ணிக்கை:

(ii) அறிவிக்கப்பட்ட மிகை ஊதியத்தொகை விழுக்காடு:

(iii) வழங்கப்பட்ட மிகை ஊதிய மொத்த தொகை:

(iv) தொகை வழங்கப்பட்ட நாள்:

**22. நிரந்தரத் தகுதி நிலை வழங்குதல்:**

(i) 480 நாட்கள் தொடர்ச்சியாக பணி நிறை செய்த தற்காலிகப் பணியாளர்களின் எண்ணிக்கை:

(ii) அந்த கால அளவில் பணி நிரந்தரம் செய்யப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை:

(iii) அந்த கால அளவில், வேண்டிய பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டிய பணியாளர்களின் எண்ணிக்கை:

(iv) கால தாமதத்திற்கான காரணங்கள்:

**23. ஒப்பந்தத் தொழிலாளர்:**

(i) ஒப்பந்ததாரர்களின் பெயர் மற்றும் முகவரி:

(ii) ஒப்பந்தக் கால அளவு:

(iii) பணியிலமர்த்தப்பட்ட ஒப்பந்த தொழிலாளர்களின் பணியின்/செயல்பாடுகளின் தன்மை:

(iv) ஒவ்வொரு ஒப்பந்ததாரரால் பணியமர்த்தப்பட்ட பணியாளர்களின் உயரளவு எண்ணிக்கை:

(v) பணிபுரிந்த நாட்களின் எண்ணிக்கை:

(iv) மனித உழைப்பு நாட்களின் எண்ணிக்கை:

**24. மாநிலங்களிடையே இடம்பெயர்ந்த வேலையாட்கள்:**

(i) சொந்த மாநிலத்திலுள்ள ஒப்பந்ததாரர்களின் பெயர் மற்றும் முகவரி:

(ii) பணி வழங்கும் மாநிலத்தில் (தமிழ்நாடு) உள்ள முதன்மை வேலையளிப்பவரின் பெயர்:

(iii) ஒப்பந்தக் கால அளவு:

(iv) பணியிலமர்த்தப்பட்ட இடம்பெயர்ந்த பணியாளர்களின் பணியின்/செயல்பாடுகளின் தன்மை:

(v) ஒவ்வொரு ஒப்பந்ததாரரால் பணியிலமர்த்தப்பட்ட, இடம்பெயர்ந்த பணியாளர்களின் உயரளவு எண்ணிக்கை:

(vi) பணிபுரிந்த நாட்களின் எண்ணிக்கை:

(vii) மனித உழைப்பு நாட்களின் எண்ணிக்கை:

(viii) வழங்கப்பட்ட இடப்பெயர்வு படித்தொகை:

(ix) பணிபுரியும் இடத்திலிருந்து வெளியிடத்திற்குச் சென்று திரும்பியதற்கு வழங்கப்பட்ட பயணப்படித் தொகை:

(x) பணிபுரியும் இடத்திலிருந்து வெளியிடத்திற்குச் சென்று திரும்பியதற்காக வழங்கப்பட்ட சம்பளத் தொகை:

நாள் :

இடம் :

வேலையளிப்பவரின் கையொப்பம்

**குமார் ஜெயந்த்,**
*அரசுச் செயலாளர்.*

**(தமிழாக்கம்)**

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 115, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (D—2)த் துறை, 13 ஏப்ரல் 2016.]*

1947 ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 14/1947) 38 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தில் செய்யக் கருதியுள்ள கீழ்க்காணும் திருத்தத்தின் வரைவு மேற்சொன்ன சட்டத்தின் 38(1) உட்பிரிவில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த அறிவிக்கை **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதங்கள் முடிவடைந்த நாளன்று அல்லது அதற்குப் பின்னர் இந்த வரைவுத் திருத்தம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், யாதொரு நபரிடமிருந்து வரப்பெறும் மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்கும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அவற்றை, தேனாம்பேட்டை, சென்னை—600 006—இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலமாக அரசு செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம் சென்னை—600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

**வரைவுத் திருத்தம்**

மேற்சொன்ன விதிகளைச் சேர்ந்த 70 ஆம் விதியில், (2) துணை விதிக்குப் பின்னர் கீழ்க்காணும் துணைவிதி சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். அதாவது:—

(3) வழக்கிடை விண்ணப்ப மனுக்களில் ஆணைகளின் நகல் ஒன்றைக் கோரி தொழிலாளர் அல்லது தொழிலாளர்கள் நேர்விற்கேற்ப தொழிலாளரின் அல்லது தொழிலாளர்களின் சார்பில் தொழிற்சங்கம் விண்ணப்பிக்கிறவிடத்து, அவருக்கு அத்தகைய ஆணைகளின் நகல் ஒன்று இலவசமாக வழங்கப்படும்.

**குமார் ஜெயந்த்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்**,
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.